# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - மார்ச் 28, 2026

Weekly E-paper ● March 28, 2026





## காத்திருக்கிறோம்!

சுப. வீரபாண்டியன்

### டில்லியிலிருந்து ராயப்பேட்டைவரை என்டிஏ பேசஞ்சர் ரயில்!

எழில்.இளங்கோவன்

### பாஜகவை வீழ்த்துவோம்

தலையங்கம்

### திருநங்கையர் சட்டத்தை ஒன்றிய அரசே! திரும்பப் பெறுக!

நிகில் தேவ்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ●திருவள்ளுவர் ஆண்டு 2057, - மார்ச் 28, 2026 | Weekly E-paper ●March 28, 2026


# காத்திருக்கிறோம்!

**சுப. வீரபாண்டியன்**



*60 ஆண்டுகளுக்கு முன்பு, திராவிடம் என்னும் பெயரில் தமிழ்த் தேசியம், இந்திய தேசியம், சர்வதேசியம் என்னும் மூன்று கோட்பாடுகள் மக்கள் முன்னால் வைக்கப்பட்டன. முறையே, திமுக, காங்கிரஸ், பொதுவுடமைக் கட்சிகள் ஆகியன அந்தக் கொள்கைகளை முன்வைத்தன. அன்று மேடைகளே மிகப்பெரிய ஊடகங்களாகத் திகழ்ந்தன! வானொலிச் செய்திகள் ஓரளவு மக்களைச் சென்றடைந்தன. தொலைக்காட்சிகள், கணிப்பொறிகள், கைபேசிகளை அறியாத காலம் அது! வாக்குகளைப் பெற, ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய் கொடுத்து, சாமி படத்துக்கு முன்னால் சத்தியம் வாங்கிக் கொண்ட நிகழ்ச்சிகளும் சில இடங்களில் நடந்தன!*

*இன்றைக்குத் தேர்தல் காட்சிகள் முற்றிலுமாக மாறிப் போய் இருக்கின்றன! கொள்கை பேசுவோர் மிக மிகக் குறைந்துவிட்டனர். நாட்டுக்கு செய்தவைகளைச் சொல்லி ஆளுங்கட்சியும், ஆளுங்கட்சியின் மீது குறைகள் சொல்லி எதிர்க்கட்சிகளும், திரைப்படக் கவர்ச்சி, மேடை ஆவேசங்களை முன்வைத்துச் சில கட்சிகளுமாக இன்றையத் தேர்தல் களம் காட்சியளிக்கிறது!*

*தேர்தலில் ஊடகங்களின் பங்கு மிகப் பெரியதாக மாறி இருக்கிறது! கணிப்பொறிகள், கைபேசிகள் வந்த பிறகு, ஒவ்வொருவரும் முகநூல் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் தங்கள் கருத்துகளை மிக எளிதாகப் பதிவிட முடிகிறது! பல நேரங்களில் தவறான கருத்துகள் மிக விரைவாகப் பரவுகின்றன. செயற்கை நுண்ணறிவின் உதவியால் பொய்யான, போலியான படங்களும், செய்திகளும் கூட மக்களை எளிதில் சென்றடைகின்றன!*

*இந்தக் கட்சியிலிருந்து அந்தக் கட்சிக்கும், அந்தக் கட்சியிலிருந்து இந்தக் கட்சிக்கும், குறுக்கும் எடுக்குமாகச் சிலர் மாறி மாறி ஓடிக் கொண்டிருக்கின்றனர். சில சிறிய கட்சிகள் கூட்டணிகளையே மாற்றிக் கொண்டிருக்கின்றன. கூட்டணியில் இடம் கேட்கும் போது ஒரு மாதிரியாகவும், இடம் கிடைக்காத நேரத்தில் வேறு மாதிரியாகவும், சில கட்சிகள் பேசுவதையும் பார்க்கிறோம்!*

*எந்தத் துறையில் இருப்பவர்கள் வேண்டுமானாலும் அரசியலுக்கு வரலாம்! ஆனால் அரசியலுக்கு வந்து, சில ஆண்டுகளாவது மக்கள் தொண்டாற்றிய பிறகு மக்களிடம் வாக்குகளைக் கேட்பது ஒரு வகை! ஆனால் திரைப்படப் புகழை வைத்துக் கொண்டு நேரடியாக முதல்வர் நாற்காலிக்கு முந்துவது இன்னொரு வகை! இரண்டாவது வகை இப்போது கூடி இருக்கிறது!*

*அதேபோல மேடைகளில் ஆவேசமாகவும், அநாகரிகமாகவும் பேசுகின்ற போக்கும் இன்று மிகுந்துள்ளது !*

*இவை அனைத்தையும் உள்வாங்கிக் கொண்டு, எந்தக் கட்சி அல்லது கூட்டணி ஆட்சிக்கு வந்தால் நாட்டுக்கு நல்லது என்பதை மக்கள் உணர்ந்து வாக்களிப்பது தான், அடுத்த தலைமுறையைக் காப்பாற்றும் !*

*தமிழ்நாட்டு அரசியலின் இன்றைய சூழலில், திமுக கூட்டணியே நாட்டையும், நம் பிள்ளைகளையும் காக்க வல்லது என்பதைப் பல புள்ளி விவரங்களோடும், சான்றுகளோடும் மக்கள் முன்னால் நாம் வைக்கிறோம்!*

*மக்கள் சிந்தித்து முடிவெடுப்பார்கள் என்னும் நம்பிக்கையில் காத்திருக்கிறோம்!*

●

# டில்லியிலிருந்து ராயப்பேட்டைவரை என்டிஏ பேசஞ்சர் ரயில்!

எழில்.இளங்கோவன்

"வாரத்துக்கு ஒருமுறை டெல்லிக்குச் சென்று அமித் ஷா வீட்டின் முன்பாக எதிர்க்கட்சித் தலைவர் பழனிச்சாமி நிற்கிறார். அதிமுகவின் தலைமையகம் சென்னை. பழனிச்சாமியின் தலைமை அலுவலகம் டெல்லி... எஜமானர்கள் கூப்பிட்ட குரலுக்கு ஓடிச் சென்றாக வேண்டும் ! " கனகச்சிதமாகச் சொல்லியிருக்கிறார் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின். மானஸ்தர், எடப்பாடி பழனிச்சாமி. எப்படியோ டில்லியின் தலையைத் தடவி பியூஸ் கோயலை ராயப்பேட்டை அலுவலகத்திற்கு வரவழைத்துவிட்டார் அவர். தொகுதி உடன்பாடும் பாஜக, பாமக, அமமுகவுடன் முடித்துக் கொண்டது அந்த என்டிஏ கூட்டணி.

அதற்குப் பிறகு எடப்பாடி, "விடுதலைச் சிறுத்தைகள், கம்யூனிஸ்டுகளோடு 20 நாள்கள் பேசிக்கொண்டு இருக்கிறார் ஸ்டாலின். பாருங்கள், நாங்கள் காலையில் பேசினோம், மாலையில் தொகுதி உடன்பாடு முடித்துவிட்டோம்"என்று பேசியிருக்கிறார்.

அவருக்குக் கொஞ்சம் விபரம் புரியவில்லை என்று தோன்றுகிறது. ஸ்டாலின் கூட்டணிக் கட்சித் தலைவர்களை 'அறிவாலய'த்திற்கு அழைத்துப் பேசுகிறார், விவாதிக்கிறார், முடிவு செய்கிறார். அது வெளிப்படைத் தன்மையாக இருக்கிறது. என்டிஏ கூட்டணியில் தொகுதி உடன்பாடு குறித்து எங்கே, எப்போது, யார்யாருடன் பேசி முடிவெடுத்தார்கள்? எடப்பாடி, டி.டி.வி.தினகரன், அன்புமணி எல்லோரும் டில்லிக்கு ஓடி ஓடி அமித்ஷாவிடம் தானே பேசினார்கள். தொகுதி உடன்பாடு டில்லியில் முடிந்தது ரகசியமாக. ராயப்பேட்டையில் கையெழுத்தானது வெளிப்படையாக.

அடுத்ததாக, செய்தியாளர்களிடம் 'அறிவுக்கொழுந்து' அன்புமணி ராமதாஸ் "கடந்த ஐஞ்சு வருசம் தமிழ்நாட்டுல ஆட்சி ந-ர-க-மா இருந்திச்சி" என்று சிலிர்த்துப் பேசியிருக்கிறார். 'அந்த நரகம்' என்ன என்பதை இங்கே சிறிது பார்ப்போம்:

தமிழ்நாட்டில் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு, மகளிருக்கான இலவச பேருந்துப் பயணம், திட்டம், கட்டணமில்லா மருத்துவ சேவைகள்,

உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூபாய் 1,000 வழங்கும் புதுமைப் பெண் திட்டம், பள்ளிக் குழந்தைகளுக்கு சத்தான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், நான் முதல்வன் திட்டம் மூலம் இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி,

மக்களைத் தேடி மருத்துவம், பசுமை தமிழ்நாடு இயக்கம், இன்னுயிர் காப்போம்- நம்மைக் காக்கும் 48 மூலம் விபத்து சிகிச்சை,

பெருமளவிலான முதலீடுகளை ஈர்த்து தொழிற்சாலைகளை ஊக்குவித்தல்,

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் திட்டம், தொழில் வளர்ச்சி, தொழிலாளர் நலன், பெண்கள் முன்னேற்றம், மீனவர் நலன், நீர் மேலாண்மை, உள்கட்டமைப்பு என்று வளர்ச்சிக்கான பல திட்டங்களைத் தீட்டி, நிதி ஒதுக்கி, நடைமுறைப்படுத்திக் கொண்டு இருக்கும் இவைகளை எல்லாம் "நரகம்" என்று சொல்கிறார் அன்புமணி என்றால் அவர் மருத்துவரா? அல்லது மன நோயாளியா? அவரின் பார்வையில் 'சொர்க்கம்' எது என்று சொல்ல வேண்டும். பாஜகவின் உத்திரப் பிரதேசத்தைச் சொல்வாரா அவர்? அவருக்கு மக்கள் சொல்வார்கள் ஏப்ரல் 23ஆம் நாள் தேர்தலில் எதுநரகம் என்று.

தலைவர் கலைஞர் அவர்கள் 2011ஆம் ஆண்டு, தனது 88 ஆம் பிறந்தநாளில் விடுத்த அறிக்கையில் "கூடாநட்பு கேடாய் முடியும்" என்று சுட்டிக்காட்டி இருந்தார். அத்தகைய நட்பில், அமித்ஷாவின் பிடியில் பாஜக வுடன் இருக்கிறார் எடப்பாடி. பீகாரில் வலிமையானவராக, முதலமைச்சராக இருந்த நிதிஷ்குமாரின் அரசியல் வாழ்வை எப்படிக் 'கூடி இருந்தே' பாஜக முடித்ததோ, அப்படி முடிக்கப் போகிறது எடப்பாடியை . "பீகாரில் என்ன நடந்ததோ அதுதான் இங்கே இந்தத் தேர்தலில் நடக்கப் போகிறது" என்று அதே ராயப்பேட்டை, செய்தியாளர்களிடம் மகிழ்ச்சியாக உறுதிசெய்கிறார் டி.டி. வி.தினகரன், எடப்பாடியை அருகில் வைத்துக் கொண்டு.



எப்படியோ, டில்லி முதல் ராயப்பேட்டைவரை எல்லாவற்றையும் மக்கள் கவனித்துக் கொண்டும், பார்த்துக் கொண்டும் காத்துக் கொண்டும், இருக்கிறார்கள்,அடுத்தமாதம்'ஒருவிரலால்' உதயசூரியனைக் கோட்டைக்கு அனுப்ப! ●

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## பாஜகவை வீழ்த்துவோம்

பாஜக ஏன் தமிழ்நாட்டின் அரசியலில் தலைதூக்கக் கூடாது?

சியோனிசமும், இந்துத்துவமும் அழிவின் இரண்டு சக்திகள். இங்கு சியோனிசம் இல்லை. ஆனால் பாஜகவின் காவி இந்துத்துவா விழித்துக் கொண்டு இருக்கிறது.

பாஜகவால் தமிழ்நாட்டுக்கு ஏற்படப் போகும் பாரதூரமான விளைவு, தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் ஒன்றிய நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கையைஉயர்த்துகிறோம்என்றபெயரில்தமிழ்நாடு உள்பட மக்கள் தொகையைச் சிறப்பாகக் கட்டுப்படுத்திய மாநிலங்களைப் படுகுழியில் தள்ளப் போடப்பட்டிருக்கும் ஆபத்து அது என்பதற்குப் புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் 888 பேர் அமரக்கூடிய வகையில் இருக்கைகள் போடப்பட்டிருப்பது ஒரு சான்று. இது நம் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கிற கத்தி.

தமிழ்நாட்டின் கோரிக்கைகளை, உரிமைக்குரலை எப்போதும் மோடி அரசு மதிப்பதில்லை. அடிப்படை உரிமைகளுக்காகக்கூட உச்ச நீதிமன்றத்தை ஒவ்வொரு முறையும் நாடும் நிலைக்குத் தள்ளப்படுகிறோம்.

இதில், மக்களவையில் நமது பிரதிநிதித்துவம் மேலும் குறைந்தால்,தமிழர்களை பா.ஜ.க. அரசு செல்லாக்காசாக்கி விடும்! வரிப்பகிர்வில் ஏற்கெனவே பாரபட்சமான அநீதியைச் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். அரசியல் உரிமைகளைப் பறித்து, தமிழ்நாட்டின் அறிவார்ந்த குரலை ஒடுக்கி, இரண்டாம் தரக் குடிமக்களாக்கும் சர்வாதிகார மோடி ஆட்சியின் காவி அரசியல் தமிழ்நாட்டில் நுழையலாமா?

மோடியின் பாஜகவுக்கு வாக்களிப்பதற்கும், எடப்பாடி பழனிச்சாமியின் அதிமுகவுக்கு வாக்களிப்பதற்கும் வித்தியாசம் ஒன்றும் இல்லை. இவர்களும் இவர்களுடன் கூட்டணி சேர்ந்த எவரும் வெற்றிபெறக் கூடாது.

மக்களவையில் தமிழ்நாட்டின் பலத்தைக் குறைக்க மாட்டேன் எனத் தேர்தலுக்காகப் பொய்யாகக் கூட மோடி வாக்குறுதி கொடுக்க மாட்டார். இத்தனை வெளிப்படையாகத் தமிழ்நாட்டை அழிக்க நினைக்கும் பாஜகவையும், அவர்களின் மறைமுகக் கூட்டாளிகளான அதிமுகவையும் புறக்கணிப்போம்!

“வெளிப்படையாகவே தமிழ்நாட்டை அழிக்க நினைக்கும் பாஜகவையும், அவர்களின் மறைமுகக் கூட்டாளிகளான அதிமுகவையும் புறக்கணிப்போம்.பாசிசத்தை வீழ்த்த, ஜனநாயகத்தையும் தமிழ்நாட்டையும் காக்க இந்தியா கூட்டணிக்கு வாக்களிப்போம்” என்று 16- ஏப்ரல் 2024 அன்று தமிழ்நாட்டு மக்களுக்கு முதல்வர் ஸ்டாலின் அவர்கள் விடுத்த அறிக்கை இப்பொழுதும் பொருத்தமாக அமைகிறது. இப்படி பாஜகவின் துரோகத்தைச் சொல்லிக் கொண்டே போகலாம் என்பது தமிழர்கள் அறியாயதது அல்ல.

ஆகவே பாசிச பாஜகவை வீழ்த்த, ஜனநாயகத்தையும் தமிழ்நாட்டையும் காக்க, அடுத்தமாதம் நடைபெற இருக்கும் மாநில சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க தலைமையிலான இந்தியா கூட்டணியை ஆதரிப்போம்.

வீழ்த்துவோம் என்டிஏ என்ற பாஜக கூட்டணியை!

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
உதவி ஆசிரியர்:
**வெற்றிச்செல்வன்**
வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

# திருநங்கையர் சட்டத்தை ஒன்றிய அரசே! திரும்பப் பெறுக!

நிகில் தேவ்

திருநர் மக்களின் சுயமரியாதையைக் கேள்விக் குறியாக்கும் Transgender Persons (Protection of Rights) Amendment Bill, 2026 மக்களவையில் நிறைவேற்றப்பட்டது. 2014 இல் இந்திய உயர் நீதிமன்றம் வழங்கிய National legal service authority v. Union of India (NALSA) தீர்ப்பு தெளிவாகக் கூறியது:

ஒரு மனிதர் தனது பாலினத்தை தானே தீர்மானிக்க உரிமை உடையவர்கள். அதுவே மனித உரிமை. மேலும், திருநங்கைகள் சமூக மற்றும் கல்வி ரீதியாக பின்தங்கியவர்கள் என்பதால் ஒதுக்கீடு (reservation) வழங்க வேண்டும் என்றும் நீதிமன்றம் கூறியது.

ஆனால் 2026

இந்தச் சட்டம் "self-identification" உரிமையைப் பறிக்கிறது. மருத்துவக்குழு சான்று இல்லாமல் ஒரு மனிதன் தனது அடையாளத்தை நிரூபிக்க முடியாது என்று கட்டுப்படுத்துகிறது. இதில் மேலும் மோசமானது "self-perceived identity" மற்றும் பல பாலின அடையாளங்களைச் சட்டம் வெளியில் தள்ளுகிறது. இது திருநர் சமூக மக்களிடம் கலந்தாலோசிக்காமல் கொண்டுவரப்பட்ட சட்டமாகும். அவர்களின் பாதுகாப்புக்கான சட்டத்தை அவர்களிடமே ஆலோசிக்காமல் நடைமுறைப்படுத்துவது எந்த விதத்தில் நியாயம் என்று தெரியவில்லை.

திருநர் மக்கள் என்று குறிக்கும் பொழுது அதில் திருநங்கைகளும், திருநம்பிகளும் உள்ளடங்குவார்கள். இந்த மசோதாவைப் பொருத்தவரை திருநங்கைகளுக்கு. அபாயகரமான திருப்பம். ஒரு மனிதரை அவரது பெயர், உடல் அல்லது ஆவணங்களின் அடிப்படையில் மட்டும் அளந்து பார்க்க முடியாது.

வேலை, கல்வி, சுகாதாரம், அடையாள ஆவணங்கள் என வாழ்க்கையின் பல துறைகளில் ஏற்கனவே புறக்கணிக்கப்படும் திருநங்கை மக்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டிய சட்டம், அவர்களின் வாழ்வையே அதிகாரத்தின் மேசையில் வைத்து சோதனை செய்யும் கருவியாக மாறக்கூடாது.

ஒருவரின் அடையாளத்தை நிரூபிக்க அவர்களின் உடலை ஆராய வேண்டிய நிலை உருவாகினால், அது ஒரு நாகரிகமான சமூகத்தின் அடையாளம் அல்ல, அடக்குமுறையின் அடையாளம். ஒரு மனிதர் தனது உடலையும், மனதையும் பற்றிச் சொல்லும் உண்மையை அரசு சந்தேகிக்கிறது. அடையாளம் ஒரு சான்றிதழாக மாறுகிறது. மனிதர் ஒரு கோப்பாக குறைக்கப்படுகிறார். இது ஆபத்தானது. ஏனெனில் இது மனித உரிமையின் மையத்தையே தாக்குகிறது.

தன்னாட்சி (autonomy)

LGBTQIA+ சமூகங்கள் ஏற்கனவே ஒதுக்கப்பட்டவர்கள். இந்த சட்டம் அவர்களை மேலும் "சான்று காட்ட வேண்டியவர்கள்" ஆக மாற்றுகிறது.

இந்தச் சட்டம் NALSA தீர்ப்பின் அடிப்படையை முற்றிலும் தகர்க்கிறது என்று சமூக அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன. முக்கியமாக NALSA தீர்ப்பு ஒதுக்கீட்டை பரிந்துரைத்தது. ஆனால் இந்த அரசு, அந்த உரிமையை செயல்படுத்தவில்லை. அதற்கு பதிலாக அடையாளத்தை கட்டுப்படுத்தும் சட்டம் கொண்டு வந்துள்ளது. இது சமூக நீதி அல்ல இது அடக்குமுறை.

தந்தை பெரியார் இடம் பயின்றதாலோ என்னவோ தமிழ்நாடு என்றுமே சமூக நீதியின் மையமாகவே திகழ்ந்துள்ளது. அது இச்சமூகத்தின் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு செயல்பட்டதை வைத்து நம்மால் கூற முடியும்.

சமூகத்தால் ஒட்டு மொத்தமாக புறக்கணிக்கப்பட்ட இவர்களின் வளர்ச்சிக்காக தமிழ்நாட்டில் திராவிட அரசாங்கம் பலவற்றை முன்னெடுத்துள்ளது.

தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே முதல்முறையாக 2008 ஏப்ரல் 15 அன்று திருநங்கைகளுக்காக அரவாணி நலவாரியம் என அமைக்கப்பட்டது. 2011இல் அது திருநங்கை நலவாரியம் என பெயர் மாற்றப்பட்டது.

தமிழ்நாட்டில் கல்வி, வேலை, அடையாள அட்டை, மருத்துவ உதவி போன்ற பல முன்னேற்றங்களை செய்தது. திட்டங்கள் ஒருபுறம் இருந்தாலும் அவர்களை சமூகத்தில் பல வார்த்தைகளால் இழிவுபடுத்தும் பொழுது அவர்களுக்கு திருநங்கை என்ற அடையாளத்தைக் கொடுத்தது கலைஞர் அரசு.

அதுபோல திருநர் மக்களை பாதுகாக்கும் விதமாக தமிழ்நாட்டில் பல திட்டங்களை திராவிட அரசு உருவாக்கியது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக இதை எதிர்த்து போராட்டம் நடந்து வருகிறது குறிப்பாக சமீபத்தில் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கமும் , மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் மாபெரும் போராட்டத்தை முன்னெடுத்தது.

சமூக விழிப்புணர்வு, சட்டப் போராட்டம், மற்றும் ஒற்றுமை தான் வழி. அடையாளம் அரசு கொடுப்பது அல்ல அது பிறப்புரிமை. நீங்கள் யார், எதை செய்ய வேண்டும் என்பதை எல்லாம் தீர்மானிக்கும் சக்தியாக மாறுவதுதான் இந்துத்துவா, பார்ப்பனிய கொள்கை. இந்தியா அதை நோக்கி நகர்ந்து வருகிறது. இந்த ஆபத்தை முறியடிக்க ஒட்டுமொத்த பொதுச் சமூகமும் ஒன்றுபட்டு இத்தகைய சட்டத்தை கொள்கை ரீதியாகவும், போராட்ட வடிவத்திலும் வலிமையாக எதிர்க்க வேண்டும்.

பல வருடங்களின் போராட்டங்களுக்குப் பிறகு இச்சமூகத்தின் இழிச் சொற்களையும் அவர்கள் மீது நடத்தப்படும் வன்முறைகளையும் தாங்கிக் கொண்டு சமூகத்தில் வேலை வாய்ப்பு எதுவும் கிடைக்காமல் தங்களின் உடலை விற்றும் பிச்சை எடுத்தும் வாழ்நாளை கடத்தும் இவர்களை அரசு புறக்கணித்து அவர்களின் மீது மேலும் வன்முறையை ஏவி விடுவது எந்த விதத்திலும் நியாயம் இல்லை. அரசு என்பது மக்களுக்கானது. அனைத்து மக்களும் அதில் உள்ளடங்குவார்கள். அவர்களின் வளர்ச்சியும், பாதுகாப்பும் அரசின் கடமையாகும். இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு மசோதாவை மறுபரிசீலனை செய்து அழுத்தமாக ஆழமாக ஆய்வு செய்து மக்களின் உண்மையான பாதுகாப்பு மசோதாவாக இதை மாற்றுவார்கள் என்று நம்புவோம். ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian